# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

## Tamil Study Centre - Mount Druitt

Mobile: 0449 892 066

Email :mtdruitttsc@gmail.com Web : www.mtsc.org.au


செய்தி மடல் 2020 — 02 16-05-2020

"தன்னிகரில்லா தமிழ்மொழி மேல் ...
பற்று இருந்தால் சொற்களுக்கா பஞ்சம்
பாசம் இருந்தால் பாடல்களுக்கா பஞ்சம்
காதல் இருந்தால் கவிதைகளுக்கா பஞ்சம்
ஈர்ப்பு இருந்தால் இலக்கியங்களுக்கா பஞ்சம்
ஆசை இருந்தால் கற்பதற்கா பஞ்சம்". ஆம் தற்போதைய சூழலில் தங்களதும் தங்களைச் சார்ந்தவர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளை மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கையை தொடர்வதற்காக இணையவழியூடான (Zoom and Google Classroom) கல்வியை ஆரம்பித்து எம் சிறார்களுக்கு தமிழைக் கற்பிக்கும் தலையாய கடமையை செவ்வனே செய்யும் மவுண்றூயிட் தமிழ் கல்வி நிலையம் தமிழை மட்டுமன்றி மாணவர்களை பண்பு, ஒழுக்கம், பணிவு, தன்னம்பிக்கை, ஆளுமை கொண்ட சிறந்த மாணவர்களாக உருவாக்கி வருகின்றது. இச்சிறப்பு பெற்ற எமது கல்வி நிலையத்தில் தமிழ் கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கம். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

### 1. பேச்சுப் போட்டி மற்றும் ஆண்டு மலருக்கான நிழற்படம் எடுத்தல் என்பன பிற்போடப்பட்டுள்ளது

எதிர்வரும் 30.05.2020 அன்று நடைபெற இருந்த எமது பாடசாலையின் வருடாந்த பேச்சுப் போட்டி தற்போதைய சூழ்நிலை காரணமாக மூன்றாம் தவணைக்கு பிற்போடப்பட்டுள்ளது. எமது பாடசாலை வழமையான வகுப்பறை கற்றல் நடவடிக்கையை ஆரம்பித்தவுடன் பேச்சுப்போட்டிக்கான திகதி தங்களுக்கு அறிவிக்கப்படும். அனைத்து மாணவர்களும் பேச்சுப்போட்டியில் பங்குபற்ற வேண்டும் என்பது எமது குறிக்கோள். எனவே பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளுக்கு அவற்றை மனப்பாடம் செய்வதிலும் மற்றும் அதனை திறமையாக மேடையில் பேசுவதற்கும் உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### 2. அரையாண்டுப் பரீட்சை

மாணவர்களுக்கான **அரையாண்டுப் பரீட்சையில் வாசிப்பு, கிரகித்தல் – பேசுதல் என்பன எதிர்வரும் 22.06.2019** அன்று முதல் வகுப்பு ஆசிரியர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டு இணையவழியூடாக நடாத்தப்படும். மீதமுள்ள எழுத்துப்பரீட்சை அடுத்த தவணையில் வகுப்பறை கற்றல் நடவடிக்கை ஆரம்பமான பின்னர் நடைபெறும். எனவே பரீட்சை தொடர்பான விபரங்களை உங்களது பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளவும்.

### 3. கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது (Federation Exam)

தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் வருடந்தோறும் நடாத்தப்படும் கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சை தற்போதைய சூழ்நிலை காரணமாக தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் பிற்போடப்பட்டுள்ளது. இப்பரீட்சைக்கான விபரங்கள் தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் அறிவிக்கப்பட்டவுடன் தங்களுக்கு தெரிவிக்கப்படும்.

### 4. அமைச்சர் விருது — 2020 (Minister Award)

இந்த வருடம் சமூகமொழிப் பாடசாலை கூட்டமைப்பு மாணவர்களுக்கான அமைச்சர் விருதினை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. எனவே எமது பாடசாலையும் இந்த வருடம் அமைச்சர் விருதிற்கு மாணவர்களை பரிந்துரை செய்வதை இடைநிறுத்தியுள்ளது. மேலதிக விபரங்களுக்கு எமது பாடசாலை அதிபரை தொடர்பு கொள்ளவும்.

### 5. பாடசாலை நேரம்

பிள்ளைகளை இணையவழியூடான பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு இணைப்பினை ஏற்படுத்திக் கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம். இது தொடர்பாக தங்களுக்கு ஏதேனும் பிரச்சனைகள் இருப்பின் உடனடியாக தங்களது வகுப்பு ஆசிரியருடன் அல்லது நிர்வாக உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| ஆரம்பமாகும் நேரம் : | பி.ப. 2.00 மணி |
| இடைவேளை : | (15 — 30 நிமிடங்கள் – தங்கள் வகுப்பு ஆசிரியர் இதனை ஒழுங்குசெய்வார்) |
| முடிவடையும் நேரம் : | பி.ப. 4.30 மணி |

### 6. மாணவர் வரவு

மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தருவது அவர்களது கல்விக்கும், பாடசாலையின் வளர்ச்சிக்கும் மிகவும் முக்கியமானதாகும். அத்துடன் அமைச்சர் விருது, சமூகமொழிப் பாடசாலைகளிற்கு நியுசவுத்வேல்ஸ் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் மானியம் மாணவர்களின் வரவில் தங்கியுள்ளது. எனவே மாணவர்கள் தவறாமல் தங்களது இணையவழி வகுப்புக்கு வருகைதரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

### 7. பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்

உங்கள் பிள்ளைகளுக்கான இந்த வருடத்திற்கான பாடசாலை கட்டணத்தை தவணை இரண்டு முடியும் முன் செலுத்தி எமக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் இதுவரை கடந்த வருடத்திற்கான உங்கள் பிள்ளைகளுக்கான பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களான அதிஷ்ட இலாப சீட்டிழுப்பு, கலைவிழா பங்களிப்பு கட்டணங்கள் செலுத்த தவறியவர்கள் விரைவாக அதனை செலுத்தி பாடசாலை திறம்பட நடைபெறுவதற்கு ஒத்துழைக்குமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.




கடந்த வருடம் முதல் எமது பாடசாலை Creative Kids Registered Provider ஆக அங்கீகாரம் பெற்றுள்ளதால் நீங்கள் Creative Kids Voucher மூலமும் எமது பாடசாலைக் கட்டணத்தை செலுத்தலாம். எனவே பெற்றோர் கொடுப்பனவை நீங்கள் பணமாக அல்லது Creative Kids Voucher மூலம் செலுத்தலாம் என்பதை உங்களுக்கு அறியத்தர விரும்புகிறோம். மேலதிக விபரங்களுக்கு எமது கல்விநிலைய பொருளாளர் திரு.பே.மகேஸ்வரமூர்த்தி அவர்களை தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி இல : 0422 519 067)

### 8. இணையவழிப் பாடசாலையில் மாணவர்களின் ஒழுங்குமுறைகள்

- இணைய வகுப்பறையில் அமைதியாக இருந்து ஏனைய மாணவர்களை குழப்பாமல் ஆசிரியரின் சொல்லுக்கு கீழ்படிந்து நடந்து கொள்ள வேண்டும்.
- இணைய வகுப்பறையில் மாணவர்கள் சக மாணவர்களுடன் ஆசிரியரின் அனுமதி இல்லாமல் செய்திகளை அனுப்புதல் அல்லது உரையாடுதல் போன்றவற்றை தவிர்த்தல். வகுப்பறையில் மாணவர்கள் இணைய வகுப்பில் இணைந்துள்ள உபகரணத்தை தவிர வேறு தொலைபேசியையோ அல்லது ஏனைய இலத்திரனியல் உபகரணங்களையோ (IPad, Tablet, Nintendo, etc ) பாவிப்பதை கட்டாயமாக தவிர்க்க வேண்டும்.

### 9. மாணவர்கள் தமிழைக் கற்பதில் பெற்றோர்களின் ஈடுபாடு

ஆசிரியர்கள் தமிழைக் கற்பித்தாலும் பெற்றோர்களே தங்கள் குழந்தைகளின் பிரதான கல்வியாளர்கள். எனவே பாடசாலைக்கும் வீட்டிற்கும் இடையிலான கூட்டு முயற்சியினாலேயே குழந்தையின் தமிழ் மொழி அறிவு வளரும் என்பதால் தமிழ் மொழி கற்பித்தல் பணியில் ஈடுபட பெற்றோர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அதாவது:
- தமிழில் குழந்தைகளுடன் முடிந்தவரை பேசுவது
- வீட்டுப்பாடம் மற்றும் பிற பாடசாலை நடவடிக்கைகள் மூலம் குழந்தைகளுக்கு வழிகாட்டுதல்
- குழந்தைகளின் முன்னேற்றம் குறித்து அதிபருடன் அல்லது வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுவது
- பாடசாலை ஏற்பாடு செய்த சிறப்பு விழாக்களில் கலந்துகொள்வது
- பாடசாலை நடவடிக்கைகளில் பங்கேற்பது
- பாடசாலை நிர்வாகத்தில் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுவது

### 10. பெற்றோர் கலந்துரையாடல்

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அறிவித்தலுக்கு அமைய ஒன்றுகூடுதல் தடையின் காரணமாக பெற்றோர் கலந்துரையாடல் இந்த தவணையில் நடைபெறமாட்டாது. நீங்கள் ஏதேனும் விடயங்களை நிர்வாகத்துடன் கலந்துரையாட விரும்பினால் எமது பாடசாலை அதிபர் திரு. பா.முரளீதரன் (02 9635 5095) அல்லது நிர்வாக தலைவர் திரு.தே.கில்பேட் (0415 788 466) அவர்களை தொடர்பு கொண்டு கலந்துரையாடி உரிய தீர்வினை பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் தங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம்.

### *11. கொரோனாவிலிருந்து பாதுகாப்பு* (Covid-19 *Safety* and Wellbeing Supports)

எமது பாடசாலை மாணவர்களுக்கு கொரோனாவிலிருந்து தங்களையும் தங்களை சார்ந்தவர்களையும் எவ்வாறு பாதுகாத்து நல்ல ஆரோக்கியமான வாழ்வை வாழ்வது எப்படி என்ற அறிவை ஆசிரியர்கள் தெரிவித்திருந்தார்கள். கொரோனா தொடர்பான மேலதிக விபரங்களுக்கு எமது பாடசாலை இணையத் தளமான ***www.mtsc.org.au*** நீங்கள் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

### *12. மாணவர்களின் விபரங்கள்*

அனைத்து மாணவர்களின் கல்வி கற்கும் பிரதான பாடசாலை, வகுப்பு, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம், முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் WhatsApp செயலி விபரங்கள் அடங்கிய தரவுத்தளம் (Database) இதுவரை இவ்விபரங்களை பதிவு செய்யாத மாணவர்களது பெற்றோர்கள் உடனடியாக உப அதிபர் தே.சதீஸ்கரன் (0412067075) தொடர்பு கொண்டு பதிவு செய்யும்படி தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம் மற்றும் தங்களது பதிவில் ஏதேனும் திருத்தம் மேற்கொள்ள வேண்டியவர்களும் தொடர்பு கொண்டு திருத்தங்களை மேற்கொண்டு தங்களது சரியான தகவல்கள் பேணப்படுவதை உறுதிப்படுத்துமாறும் தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம். (மாணவர்களிடம் கையளிக்கப்பட்ட படிவத்தை பூர்த்திசெய்து இதுவரை ஒப்படைக்காத மாணவர்கள் 30.05.2020 க்கு முன்னர் அதனை வகுப்பு ஆசிரியரிடம் ஒப்படைக்கவும்)

### *13. இணையத் தளம்* (Webpage)/ *முகப் புத்தகம்* facebook

எமது பாடசாலை இணையத் தளமான ***www.mtsc.org.au*** மற்றும் முகப்புத்தகம் தேவையான தகவல்ளைக் கொண்டதாக தரவேற்றப்பட்டு புதுப்பொழிவுடன் அனைவரும் பயன்பெறும் வகையில் பாடசாலையினால் பேணப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம். எமது பாடசாலை முகப்புத்தக முகவரி – https://www.facebook.com/groups/374995486577634/

### *14.* **வகுப்பு ரீதியான வாட்ஸ்அப் குருப் (Class WhatsApp Group)**

பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் / குழு உறுப்பினர்களிடையேயான தகவல்தொடர்புகளை ஒவ்வொரு வகுப்பிற்கும் வாட்ஸ்அப் குழுக்கள் வழியாகவும் செய்திமடல் ஊடாகவும் பள்ளி கையேடு மூலம் வழக்கமான மின்னஞ்சல்கள் வாயிலாகவும் மற்றும் கலந்துரையாடல்கள் மூலமாகவும் பெற்றோர்களையும் மாணவர்களையும் தொடர்பு கொண்'டு கருத்துக்கள் மற்றும் தகவல்கள் பரிமாற உள்ளோம். எனவே பெற்றோர்கள் இது தொடர்பாக தங்கள் கருத்துக்களை நிர்வாகத்திடம் தெரிவிக்கலாம்.

### *15.* **வகுப்பு ரீதியான கூகிள் வகுப்பு (Google Classroom)**

ஆசிரியர்கள் மாணவர்களிடையேயான இணைய கூகிள் வகுப்புக்கான பாடசாலையுடன் கூடிய மின்னஞ்சல் முகவரிகள் உங்கள் வகுப்பு ஆசிரியர்களினால் உங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதுவரை அவ்மின்னஞ்கலை Sign in செய்தாத மாணவர்கள் உடனடியாக உங்களது மின்னஞ்சலை Sign in செய்து உங்களுடைய கூகிள் வகுப்பில் இணைப்பினை ஏற்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். பாடம் மற்றும் வகுப்பு வேலைகள் தொடர்பான தகவல்களை ஆசிரியர்கள் இதன் வழியாக அனுப்பிவைக்க உள்ளதால் ஒவ்வொரு மாணவர்களும் உங்களது மின்னஞ்சல் முகவரியூடாக கூகிள் வகுப்பில் இணைந்திருப்பது மிகவும் அவசியம். இது தொடர்பாக தங்களுக்கு ஏதேனும் உதவிகள் தேவைப்படின் உடனடியாக தங்களது வகுப்பு ஆசிரியருடன் அல்லது அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### *16.* **Zoom and Google Email ID**

மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் பாடசாலையுடன் கூடிய மின்னஞ்சல் முகவரி பாடசாலை நிர்வாகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இவ் மின்னஞ்சல் முகவரியை எமது பாடசாலையின் தேவைக்கு மட்டுமே மாணவர்கள் உபயோகப்படுத்த வேண்டும். தயவுசெய்து மாணவர்கள் இதனை தங்களது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொள்வதுடன் இவ்மின்னஞ்சல் முகவரியை தவறான முறையில் பயன்படுத்துபவர்களின் பாவனையை தற்காலிகமாக இடைநிறுத்த அல்லது முற்றாக இடைநிறுத்த பாடசாலை நிர்வாகத்தி உரிமையுண்டு என்பதையும் இதனால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு பாடசாலை நிர்வாகம் பொறுப்பேற்கமாட்டாது என்பதையும் தங்களுக்கு தெரியப்படுத்த விரும்புகின்றோம். இது தொடர்பாக ஏதேனும் கருத்துக்கள் இருப்பின் பெற்றோர்கள் பாடசாலை நிர்வாகத்திடம் தெரிவிக்கலாம் என்பதையும் தங்களுக்கு அறியத்தர விரும்புகின்றோம்.

### *17. ஆசிரியர்களின் தொலைபேசி விபரங்கள் :*

| | | | |
|---|---|---|---|
| திருமதி. ராஜேஸ்வரி குலவீரசிங்கம் : | 0449 892 066 | திருமதி. தயாழினி முரளிதரன் : | 0434 284 538 |
| திருமதி. நிருபா ஜனார்தனன் : | 0469 135 014 | திருமதி. விஜயசுதா குகனேஸ்வரன் : | 0432 122 601 |
| திருமதி. பாமரதி மகேஸ்வரமூர்த்தி : | 0413 622 746 | திருமதி. கஜந்தி சதீஸ்கரன் : | 0469 077 745 |
| திருமதி. அனிதா சிவசங்கர் : | 0466 150 541 | திரு. பரமேஸ்வரன் இரங்கநாதன் : | 0470 386 558 |
| திரு. சாமித்தம்பி கனகசிங்கம் : | 0451 489 664 | திருமதி. செல்வராஜி இரங்கநாதன் : | 0469 427 599 |
| திரு. எல்விஸ் எமிலியானுஸ் : | 0424 314 740 | திருமதி. விஜயராணி சந்தோஷ் : | 0414 653 064 |
| திருமதி. சாந்தி ஜெயதேவன்: | 0401 649 883 | திருமதி. சரஸ்வதி விஜயசங்கர் : | 0469 930 315 |
| திரு. செலஸ் குணரட்னம் : | 0430 039 602 | திருமதி. ரெஜினா கெங்காதரன் : | 0402 164 717 |
| செல்வி. சிந்துஜா செல்வானந்தன் : | 0468 920 172 | திருமதி. நிசாந்தி முரளிதரன் : | 0401 635 387 |

### *18. கலைவிழா*

எமது பாடசாலையின் வருடாந்த கலைவிழா பற்றிய தகவல்களை அடுத்த செய்திமடலில் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

### *19. முகநூல் விளம்பரம்*

தமிழ் கற்க ஆர்வமுள்ள புதிய மாணவர்கள் இந்த இக்கட்டான சூழ்நிலையில் பயன்பெறும் வகையில் எமது பாடசாலை இலவசமான இணையவழிக் கற்றலை வழங்கவுள்ளது. இதில் இணைந்து கொள்ள விரும்பும் புதிய மாணவர்கள் எமது பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு இச்சேவையைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை இங்கு தெரிவிப்பதுடன் இதுதொடர்பான முகநூல் விளம்பரம் ஆசிரியர்களால் தங்களது வாட்ஸ்அப் குரூப்பில் பகிரப்படவுள்ளது. இவ்விளம்பரத்தை நீங்களும் உங்கள் நண்பர்களுக்கு பகிர்ந்து பாடசாலையினதும், தமிழ்மொழியினதும் வளர்ச்சிக்கு உங்களது பங்களிப்பை செய்யும் வண்ணம் தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் இவ்விளம்பரம் பாடசாலையால் மவுண்றூயிட் சுற்றாடல் முகநூல் பவனையாளர்களுக்கு விளம்பரப்படுத்தப்படுகின்றது என்பதையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

### *20. விளம்பரதாரர்களது சேவையைப் பாராட்டுதல்*

30வது ஆண்டில் காலடியெடுத்து வைத்துள்ள எமது கல்விநிலையத்தின் வளர்ச்சிக்கு இதுவரை காலமும் இன்முகத்துடன் உதவிடும் விளம்பரதார நல்லுள்ளங்களின் சேவையைப் பாராட்டி அவர்களுக்கு பாடசாலையினால் சான்றிதழ்கள் வழங்கவுள்ளோம். எனவே எமது விளம்பரதாரர்கள் எமது பாடசாலை உப அதிபர் திரு.தே.சதீஸ்கரன் (0412 067 075) அவர்களை தொடர்பு கொண்டு தங்களின் விபரங்களை தெரியப்படுத்துமாறு தங்களை அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

### *21. பாடப்புத்தகம் மற்றும் பயிற்சிப் புத்தகம்*

மாணவர்கள் தமது கற்றலுக்குத் தேவையான பாடப்புத்தகம் மற்றும் பயிற்சிப் புத்தகத்தை எமது பாடசாலை உப அதிபர் திரு.தே.சதீஸ்கரன் (0412 067 075) அல்லது செயலாளர் திரு.ரா.சரவணன் (0406 374 039) அவர்களை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

### *22. பாடசாலை விடுமுறை*

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அறிவித்தலுக்கு அமைய சமூகமொழிப் பாடசாலைகள் வழமையான வகுப்பறை கற்றல் நடவடிக்கையை இந்த தவணையில் ஆரம்பிக்க முடியாது. எனவே அரசு அனுமதிக்கும் வரை எமது பாடசாலை தொடர்ந்து இணையவழியில் கற்பித்தலை தொடரும் என்பதை தங்களுக்கு தெரிவிப்பதுடன் எமது பாடசாலையின் தவணை இரண்டு எதிர்வரும் **04.07.2020** அன்றுடன் முடிவடைந்து தவணை மூன்று வருகின்ற **25.07.2020** அன்று ஆரம்பமாகும் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.





**"தூங்கும் புலியை பறை கொண்டு எழுப்பினோம்**

**தூய தமிழரை தமிழ் கொண்டு எழுப்பினோம்"** – கவிஞர் பாரதிதாசன்.